# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 15.04.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# மாகாண சபை முறை ஒழிப்பதற்கு இடம் கொடுக்க மாட்டோம்





**(எஸ்.தில்லைநாதன்)**

மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம். ஆனால் வெறுமனே இருக்கின்ற மாகாணசபை முறை எங்கள் பிரச்சனைக்கு தீர்வு என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். மாகாண சபை முறைமை இருக்க வேண்டும். அது முழு அதிகாரங்களை பெற்றதாக ஒரு சமஸ்டி கட்டமைப்பில் வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு ஆட்சியாக மலர வேண்டும்

02 ஆம் பக்கத்தில்...

## அமெரிக்காவின் தலையீட்டைக் கோரி காணாமல் போனோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம்

**(கீதன்)**

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அமெரிக்காவின் தலையீட்டை பகிரங்கமாகக் கோருவதாக காணாமல் போனோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கடந்த 1515 நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் போனவர்களின் உறவினர்கள் புது வருடப் பிறப்பன்று மேற்கொண்ட கவனயீர்ப்பு

02 ஆம் பக்கத்தில்...



## ஜனாதிபதி கோட்டாபய ஹிட்லராக அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல





**(ஊர்காவலன்)**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜெர்மனியின் சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லருடன் ஒப்பிட்டு வெளியிட்ட கருத்து, அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேவையேற்படின் ஹிட்லராக மாறுவார் என்று இராஜாங்க அமைச்சர் திலும்

02 ஆம் பக்கத்தில்...

## 18 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

**(காந்தன்)**

மத்திய, சபரகமுவ, மேல், வடமேற்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை மற்றும் அனுராதபுரம் ஆகிய 18 மாவட்டங்களுக்கு கடுமையான மின்னல், இடியுடன்

02 ஆம் பக்கத்தில்...

## 11 கடும் போக்கு இஸ்லாமியவாத அமைப்புகளை தடை செய்து வர்த்தமானி வெளியானது

**(காந்தன்)**

இலங்கையில் 11 'கடும்போக்கு இஸ்லாமியவாத' அமைப்புகளை தடை செய்து, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, தீவிரவாத நடவடிக்கைகளுடன்

02 ஆம் பக்கத்தில்...






## சிங்கள இனவாத அமைப்புகளை தடை செய்யாதது ஏன்?



**(ராஜ்)**

இனவாத கொள்கைகளைக் கொண்ட பெரும்பான்மை சிங்கள அமைப்புகளுக்கு ஏன் தடை விதிக்கப்படவில்லை என, பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...









## போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குச் செல்ல முற்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்தவர் கைது

**(நமது நிருபர்)**

போலியான கடவுச்சீட்டு ஒன்றைப் பயன்படுத்தி டுபாய் ஊடாக கனடாவுக்குச் செல்ல முற்பட்ட மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய ஒருவர் நேற்று புதன் அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று புதன்கிழமை அதிகாலை

02 ஆம் பக்கத்தில்...









## புத்தாண்டு வாழ்த்து தெரிவித்த ஜோ பைடன்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தமிழ், கேரளா, பெங்காலி, நேபாளி உள்ளிட்ட பல்வேறு தரப்பு மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு அதிவேக வீதியில் இடம்பெற்ற விபத்தில் 8 வாகனங்கள் சேதம்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 8 இற்கும் அதிக வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்து காரணமாக மாத்தறை திசையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

நேற்று முற்பகல் 11.15 மணியளவில், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் களனிகம - தொடங்கொட இடைப்பட்ட பகுதியில் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகே சுமார் 10 வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து மாத்தறை திசையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனத்தை அடுத்து, குறித்த திசையிலான போக்குவரத்து நெரிசல் சீரமைக்கப்பட்டுள்ளதாக, அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டு தினமான நேற்று அதிவேக வீதிகளில் பெருமளவான வாகனங்கள் பயணித்து வருவதாகவும் இதன் காரணமாக, வாகனங்களுக்கு இடையில் உரிய வேகம் மற்றும் தூரத்தைப் பேணுமாறு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) சாரதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

திடீரென ஒரு வாகனம் மற்றொரு வாகனத்துடன் மோதியதைத் தொடர்ந்து, பின்னால் வந்த வாகனங்கள் ஓரிரண்டு ஒன்றோடொன்று மோதியுள்ளது. இதனைத் தொடர்ந்து அதற்கு பின்னால் வந்த வாகனங்கள் குறித்த விபத்தை தவிர்க்கும் வகையில் திடீரென நிறுத்த ஆரம்பித்ததைத் தொடர்ந்து இரண்டு வாகனங்கள் மூன்று வாகனங்கள் என, இடைக்கிடை இவ்வாறு வாகன விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

குறித்த விபத்தில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வேன் ஒன்றில் பயணித்தவருக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளாக தெரிவித்தார்.

## ஜனாதிபதி கோட்டாபய ஹிட்லராக அரசாங்கத்தி

அமுனுகம வெளியிட்ட கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

'அது ஒரு இராஜாங்க அமைச்சரின் கருத்தே தவிர அரசாங்கத்தின் கருத்தல்ல' என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட கருத்துகள் இருக்க முடியும் என்றும் அவற்றைப் பாரதூரமானதாக எடுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 'ஹிட்லர் எந்தவொரு அரசியல்வாதிக்கும் முன்மாதிரியானவர் அல்ல' என்று இலங்கைக்கான ஜெர்மனி தூதுவர், இராஜாங்க அமைச்சரின் கருத்துக்குப் பதிலளித்துள்ளார்.







## போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி

3.15மணிக்குஐக்கிய அரபு இராச்சியத்தின்டுபாய் நோக்கி பயணிக்கவிருந்த எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் பயணிப்பதற்காக இவர் விமான நிலையத்திற்கு சென்றிருந்தார்.

அதன் பின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினர் மேற்கொண்ட தொழினுட்ப ரீதியான பரிசோதனையின் போது கனடாவுக்கான கடவுச் சீட்டு போலியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## புத்தாண்டு வாழ்த்து தெரிவித்த ஜோ பைடன்

தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில், வைஷாகி, நவராத்திரி, சாங்ரன் மற்றும் வரும் வாரத்தில் புத்தாண்டு கொண்டாடும் தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய சமூக மக்களுக்கு நானும் ஜில்லும் (பைடனின் மனைவி) வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனிய பெங்காலி, கம்போடியன், லியோ, மியான்மரிஸ், நேபாளி, சின்ஹலிசி, தமிழ், தாய் (தாய்லாந்து), விஷூ புத்தாண்டு வாழ்த்துகள் என பதிவிட்டுள்ளார்.

## சிங்கள இனவாத அமைப்புகளை தடை செய்யாதது என்?

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய, அரசாங்கத்தினால் 11 முஸ்லிம் அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த பட்டியலில் சிங்கள அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், அந்த இனவாத அமைப்புகளைத் தடை செய்யாது, இஸ்லாமிய அமைப்புகளை மாத்திரம் தடை செய்வதானது ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கையின் ஊடாக, சட்டத்தில் பிரச்சினை உள்ளமை தெளிவாவதாகவும், இந்த நாட்டிலுள்ள சட்டம் சிறுபான்மை சமூகத்திற்கு ஒரு விதமாகவும், பெரும்பான்மை மக்களுக்கு வேறொரு விதமாகவும் செயற்படுவது இதனூடாக உறுதிப்படுத்தப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையானது, அநீதியான நடவடிக்கை என்பதுடன், எதிர்காலத்தில் இதனூடாக பிரச்சினைகள் அதிகரிக்கக்கூடும் எனவும் அவர் தெரிவிக்கின்றார். அத்துடன், குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த எவரும் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எந்தளவிற்கு நியாயமானது என்ற கேள்வி எழுவதாகவும், பெரும்பான்மை சமூகத்தைக் கொண்டு, அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஊடாக, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை பேசுவதாகவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவிக்கின்றார். அந்த வகையில் அதிலுள்ள பெரும்பான்மை சிங்கள அதிகாரிகளுக்கு, இஸ்லாமிய கொள்கைகள் தொடர்பில் அறிந்திருக்க வாய்ப்பில்லை எனவும், வெள்ளைக்காரர்கள், இலங்கை தொடர்பில் தீர்மானங்களை எடுத்ததை போன்றே, தற்போதைய அரசாங்கம் சிறுபான்மை சமூகத்திற்கு எதிராக தீர்மானங்களை எடுத்து வருவதாகவும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவித்துள்ளார்.

## 11 கடும் போக்கு இஸ்லாமியவாத அமைப்புகளை தடை செய்து

தொடர்புடைய 11 அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்த அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு தலைமைத்துவம் வழங்குவது, உறுப்பினராக இருப்பது, அமைப்புடன் தொடர்புடைய உடை சின்னங்களை அணிவது, கூட்டங்களை நடத்துவது, ஊக்குவிப்பது, தகவல்களை வெளியிடுவது போன்ற நடவடிக்கைகள் தண்டனைக்குரிய குற்றமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்வரும் இஸ்லாமிய அமைப்புகளே இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளன.

1. ஐக்கிய தௌஹீத் ஜமாஅத்
2. சிலோன் தௌஹீத் இமாஅத்
3. ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்
4. அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத்
5. ஜம் இய்யதுல் அன்சாரி சுன்னத்துல் மொஹம்மதியா
6. தாருல் அதர் அல்லது ஜாமிஉல் அதர்
7. ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம்
8. ஐஎஸ்ஐஎஸ்
9. அல்கைதா
10. சேவ் த பேர்ல்ஸ்
11. சுபர் முஸ்லிம்

## 18 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

கூடிய சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சில இடங்களில் கடும் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் என்றும், இடியுடன் கூடிய மழைக்காலங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிமை மையம் எதிர்வுகூறியுள்ளது.

அதன்படி, கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார், வவுனியா, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், மாத்தளை, கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரஎலிய, கொழும்பு, களுத்துறை, ரத்னபுரி, காலி மற்றும் மாத்தறை உள்ளிட்ட 17 மாவட்டங்களில் இந்த சீரற்ற வானிலை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழைக்காலங்களில் நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி போன்ற திறந்தவெளி பகுதிகளைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர்.

இடியுடன் கூடிய மழைக்காலங்களில் கம்பி தொலைபேசி மற்றும் இணைக்கப்பட்ட மின்சார சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும், சைக்கிள், டிராக்டர்கள் மற்றும் படகுகள் போன்ற திறந்த வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

## அமெரிக்காவின் தலையீட்டைக் கோரி காணாமல் போனோரின்...

ஆர்ப்பாட்டத்தில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எந்தவொரு குழந்தையும் 2009 ஆம் ஆண்டு முதல் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை தாம் இழந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதன் மூலம் எந்தவொரு தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காமைக்கு பௌத்த மத குருக்கள், சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் சிங்கள பொதுமக்களே காரணமென்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிங்கள மக்கள் எப்போதும் இனவெறி அரசியல்வாதிகளையே பதவிக்கு தேர்ந்தெடுப்பதாகவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

தாம் 2017 முதல் அமெரிக்காவின் தலையீட்டைக் கோரி வருகின்ற நிலையில், இப்போது அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் ஐநாவில் அமெரிக்காவின் தலையீட்டை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இனப்படுகொலை மற்றும் ஒடுக்குமுறைகளில் இருந்து தமிழர்களை மீட்க அனைவரும் கூட்டாக அமெரிக்காவின் தலையீட்டைக் கோர வேண்டும் என்றும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## மாகாண சபை முறை ஒழிப்பதற்கும் இடம் கொடுக்க மாட்டோம்

என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதுவருட தினமான நேற்று புதன்கிழமை அல்வாய் கிழக்கு, இலகடியில் உள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற புத்தாண்டு பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;

இன்றைய தமிழ் சிங்கள புத்தாண்டு இந்நாட்டிலே மக்கள் சந்தோசமாக கொண்டாட வேண்டும் என வாழ்த்துகின்றோம். நாட்டிலே பல விதமான பிரச்சனைகள் இருக்கின்றன. பொருளாதார பிரச்சனைகள் இப்போது முக்கியமாக மேலோங்கி நிற்கிறது. இந்த சூழ்நிலையிலே இப்புத்தாண்டு கொண்டாடுவதற்கு வழியில்லாமல் இருப்பவர்களுக்காக நாங்கள் விசேடமாக அவர்களை நினைவுகூறுகின்றோம். செலவழிக்க முடியாவிட்டாலும் வருகின்ற புத்தாண்டு எங்களுக்கு நல்ல புத்தாண்டாக அமைய வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த புத்தாண்டிலாவது எங்களுக்கு ஒரு விடிவு ஏற்பட வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கின்றோம். பிரார்த்திப்பது மட்டுமல்ல அதற்காக தொடர்ந்து எங்களது பிரயாசையையும் நாங்கள் கொடுத்துக் கொண்டேயிருப்போம்.

எங்களுடைய முயற்சி ஒருபோதும் கைவிடப்படமாட்டாது. ஆகையினாலே அனைத்து மக்களுக்கும் நாங்கள் வாழ்த்து சொல்லுகின்ற அதே வேளையில் விசேடமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலையை நாங்கள் வேண்டி அதற்காக உழைப்போம் என்று உறுதி கூறுகின்றோம்.

அரசாங்கத்துக்குள்ளே மாகாணசபைத் தேர்தல் நடத்துவது பற்றி பெரியதொரு இழுபறி நடந்து கொண்டிருக்கிறது என்று எங்களுக்கு தெரிகிறது. அரசியல் கட்சியாக அவர்கள் அந்த இரண்டாவது நிலையிலேயும் தாங்கள் ஆட்சிகளை கைப்பற்ற வேண்டும் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் கடும்போக்குவாத பின்னணியை கொண்ட பலர் இந்த அரசாங்கத்தை இந்தத் தடவை பதவிக்கு கொண்டு வந்தவர்கள் விசேடமாக ஜனாதிபதியின் வெற்றிக்காக உழைத்த இனவாத சிந்தனை உள்ள கடும்போக்கு வாதிகள் மாகாணசபை முறை அகற்றப்பட வேண்டும் என்று தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக தெரிவிக்கிறார்கள். ஆகையினாலே இந்த இரண்டு தரப்பினர்களுக்கு இடையே நடக்கின்ற இழுபறி யாருக்கு வெற்றியில் முடியும் என்பதை எங்களால் சொல்ல முடியாதிருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரையிலே மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம். ஆனால் வெறுமனே இருக்கின்ற மாகாணசபை முறையோடு நாங்கள் எங்கள் பிரச்சனைக்கு தீர்வு என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மாகாணசபை முறைமை இருக்க வேண்டும். ஆனால் அது முழு அதிகாரங்களை பெற்றதாக ஒரு சமஸ்டி கட்டமைப்பில் வடக்கு கிழக்கு இணைந்ததாக ஒரு ஆட்சியாக மலர வேண்டும். அதற்கான எங்களுடைய யோசனைகளை இந்த அரசாங்கம் நியமித்துள்ள குழுவுக்கு முன்வைத்துள்ளோம். அவர்களுடன் நீண்டதொரு சம்பாசனைய நடத்தி இருக்கின்றோம். அதற்குப் பிறகும் இரண்டு மூன்று கடிதங்கள் அவர்களுக்கு எழுதியுள்ளோம். ஆகையினாலே எங்களுடைய முயற்சி இது தொடர்பாக தொடர்ந்து நடைபெறும்.

மாகாணசபைத் தேர்தல் மிக விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

என்னுடைய பாதுகாப்பு எப்படி இருக்கிறது என்று எனக்கு தெரியாது. அது பாதுகாப்பு தரப்பினருக்கு தான் தெரியும். இது அவர்களே நீதிமன்றத்துக்கு முன்பாக பல அறிக்கைகளை முன்வைத்து சொன்ன செய்தி.

பல ஆயுதங்களை கண்டெடுத்து 2019 திலிருந்து ஒரு நீதிமன்ற வழக்கில் இந்த 15 பேரையும் உட்படுத்தி என்னை கொலை செய்த முயற்சித்தார்கள் என்றும், வேறுபல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்கள் தடுப்புக் காவலிலே இருந்தவர்கள். நேற்று முன்தினம் அவர்களிலே 11 பேர் அவர்களுக்கு எதிராக சாட்சிகள் இல்லை என்று சட்டமா அதிபர் சொன்னதாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அதனுடைய பின்னணி எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் இதே போல இன்னும் ஓரிரு வழக்குகள் இருப்பதாக அறிகிறேன். ஆகையினாலே அரசாங்கம் ஜனவரி மாதத்திலேயே பாராளுமன்றத்திலே பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறினார் சுமந்திரனுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கிறது நான் அவருக்கு எச்சரிக்கை செய்து இருக்கின்றேன் என கூறினார். பிறகு பெப்ரவரி மாதத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி நடைபயணம் முடிவடைகின்ற போது என்னுடைய விசேட பாதுகாப்பு அகற்றப்பட்டது. அதைப்பற்றி எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போதும் அந்த நாள் மூன்று தடவைகள் அவர் திரும்பத் திரும்ப பாராளுமன்றத்தில் கூறினார் அவருக் கு(சுமந்திரனுக்கு) உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது எங்களுடைய ஆராய்ச்சியின் படி அவருக்கு இப்போதும் உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது ஆனால் அவர் நடைபயணத்தில் சென்றதன் காரணத்தினால் இதனை நீக்குகிறோம் அன்று சொன்னார். ஆகவே உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டே விசேட பாதுகாப்பை அவர் நீக்கிய காரணத்தினால்தான் அன்றைக்கே பாராளுமன்றத்தில் சொல்லியிருந்தேன் எனக்கு ஏதாவது நடக்குமாக இருந்தால் அவர் பொறுப்பேற்க வேண்டும் என்று. இப்பொழுது என்னுடைய பாதுகாப்பிலிருந்து நீக்கி என்னை கொலை செய்ய முயற்சித்தார்கள் என்று அவர்களாகவே இரண்டரை வருடங்களாக தடுத்து வைத்திருந்த 11 பேரை விடுவித்து இருக்கிறார்கள். ஆகவே அடுத் தடுத்ததாக என்ன நடக்கும் என்று சொல்ல தெரியாது. இதற்கு முழுப்பொறுப்பும் சரத் வீரசேகராவும், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும், அரசாங்கமும் தான் எடுக்க வேண்டும் என்க்கூறினார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# திருக்கோணேஸ்வர தீர்த்தோற்சவத்தில் பக்தர்களை காக்க வைத்த படையினர்

**(பொன்ஆனந்தம்)**
**(கதிரவன்)**

திருக்கோணேச பெருமானின் பிரமோற்சவத்தின் தீர்த்தோற்சவத்தில் பக்தர்களை காக்க வைத்து படையினர் விசனமடைய வைத்த சம்பவம் நேற்று பாவனாச தீர்த்தக் கரையில் இடம்பெற்றதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

காலையில் 7.00மணியளவில் ஆலயத்தில் இருந்து பெருமான் தீர்த்தக்கரை வந்தபோதும் இராணுவத்தினர் நூறு பேர் வீதமே அனுமதிப்போம் என கூறியதனால் கோட்டை க்குள் வீதியில் மக்கள் காத்து நின்ற நிலமை ஏற்பட்டது.

பாவனாச சுனை இராணுவத்தின் பிடியில் இருக்கின்றது. ஆயினும் கடந்த காலங்களில் கடற்படையினர் சில மட்டுப் படுத்தப்பட்ட ஏற்பாட்டுடன் இதற்கான ஏற்பாடுகளை செய்து பவுசர்மூலம் தீர்த்த நீரை பீச்சி வந்திருந்தனர்.

கொரோனா தொற்று காரணமாக இந் நடவடிக்கை என்று படையினர் கூறினாலும் குறித்த வீதியில் நெருக்கமாக நிறுத்தி வைத்து சுகாதாரமானதாக தீர்த்த கரையில் பெருமளவு பகுதி இருந்த நிலையில் அங்கு மக்களை பாதுகாப்பாக ஒழுங்கு படுத்தியிருக்கலாம்.

திருவிழாவின் போது எந்த தடையுமின்றி மக்கள் சென்று வர அனுமதிக்கப்பட்டனர். எந்த முன்னேற்பாடும் இருக்கவில்லை. எனவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

கொரோனாவின் பேரால் திருக்கோணேசப்பெருமானின் அடியார்கள் இவ்வாறு நடாத்தப்பட்டது மிகுந்த ஏமாற்றத்தை தந்ததாக பலரும் முறையிட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆயலத்தில் விடே பூஜை







**(ரக்ஸனா)**

மலர்ந்திருக்கின்ற பிலவ எனும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு - களுதாவளைசுயம்புலிங்கப் பிள்ளையார் ஆயலத்தில் விஷேட பூஜை வழிபாடும், உள் வீதி திருவிழாவும் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

மூல மூர்த்தியாகிய சுயம்புலிங்கப் பிள்ளையாருக்கு பூஜைகள் நடைபெற்று பின்னர் வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்றன. தொடர்ந்து பிள்ளையார், முருகன் வள்ளி சமேதராய், சிவன் பார்வதி சமேதராய் ஆலயத்தின் உள்வீதி வலம் வந்து உள்வீதி திருவிழா நடைபெற்றது.

இதன்போது பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். இறுதியில் ஆலய பலந்து கொண்ட பக்தர்களுக்கு ஆலய பிரதம குரு கைவிஷேஸடம் வழங்கப்பட்டது. கிரியைகள் அனைத்தும் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சு.கு.வினாயகமூர்த்தி குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

# திருகோணமலை பத்திரகாளி அம்பாள் கோயிலில் புதுவருட சிறப்பு பூசை







**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு சிறப்பு பூசை நிகழ்வுகள் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் கோயிலில் நேற்று புதன்கிழமை காலை இடம் பெற்றது.

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குரு வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் பக்தர்களுக்கு நல்லாசி வழங்கினார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கெடட் சார்ஜன் மேஜராக கந்தளாய் மகா வித்தியாலய மாணவன் தெரிவு

(எப்.முபாரக்)

21 ஆவது மாணவர் படையணியின் கெடட் சார்ஜன் மேஜராக கந்தளாய் அல் தாரீக் மகா வித்தியாலயத்தினைச் சேர்ந்த பாரீஸ் முகம்மட் ஆக்கில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான கெடட் போட்டிகளின் போதே இவர் கெடட் சார்ஜன் மேஜராக தெரிவாகியுள்ளார்.

இம்மாணவன் கடந்த வருடம் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கெடட் கொமாண்டிங் போட்டியில் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டதும் விசேட அம்சமாகும்,இம் மாணவனுக்கு பயிற்றுவிப்பாளராக செயற்பட்டவர் பொலிஸ் திணைக்களத்தின் மாணவர் பயிற்றுவிப்பாளர் திரு அஜித் அகும்.

இவர் கந்தளாய் பகுதியைச் சேர்ந்த முகம்மட் பாரீஸ் மற்றும் நிகாரா ஆகியோரின் செல்வப் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில்
# 52 கோடி 50 இலட்சம் ரூபா நிதி வழுங்கப்படுகிறது

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தினால் 5000 ரூபா விசேட நிவாரண கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியாக தற்போது இடம்பெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள-தமிழ் புதுவருடத்தை கொண்டாடும் மக்களுக்கும் புனித ரமழான் நோன்பை எதிர்கொண்டுள்ள முஸ்லிம் மக்களுக்கும் இந்த 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றன.

மருதமுனை - நற்பிட்டிமுனை மக்களுக்கு 5000.00 ரூபா கொடுப்பனவு வழங்கிவைக்கும் நிகழ்வு வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம்.எம். முபீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சமூர்த்தி பதில் பணிப்பாளருமான வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கிவைத்தார்.

அம்பாறை மாவட்டத்தில் 52 கோடி 50 இலட்சம் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. கடந்த மூன்று தினங்களாக 12 கோடி 10 இலட்சம் ரூபா நிதி வழங்ப்பட்டுள்ளது. மாவட்டத்தில் சமூர்த்தி உதவி பெறும் 89000 பயனாளிகளும் குறைந்த வருமானம் பெறும் 20000 பயனாளிகளும் உள்ளனர். 5000.00 ரூபாவை பயனுள்ள





விதத்தில் பெறுமதியாக செலவு செய்ய வேண்டும் என்று இங்கு உரையாற்றிய மேலதிக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சமூர்த்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் யானையுடன் மோதி படுகாயம்



(எப்.முபாரக்)

திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிவுலகட பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் யானையுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் கோமரங்கடவல - அடம்பன பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான எம்.குணசேகர (43வயது) ஆவார்.

புத்தாண்டை முன்னிட்டு தனது நண்பர்களுடன் மது அருந்தி விட்டு மோட்டார் சைக்கிளில் அவரது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது வீதியைக் கடக்க முற்பட்ட யானையுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாகவும் இவரது மோட்டார் சைக்கிள் யானையின் தாக்குதலினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்து சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# நோன்பை முன்னிட்டு குர்ஆன் பிரதிகள் வழுங்கி வைப்பு





(பைஷல் இஸ்மாயில்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ இன் தேசியத் தலைவர் சஹிட் எம். றிஸ்மியின் ஆலோசனைக்கும், வழிகாட்டலுக்கும் அமைவாக அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. ஏற்பாட்டில் புனித றமழான் மாதத்தினை முன்னிட்டு மாணவர்களுக்கு அல்குர்ஆன் பிரதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் தலைவரும், அதிபருமாகிய சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.றியாஸின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு ஆலங்குளம் பல்தேவைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை ஜமி்ஆப் பள்ளிவாசல் தலைவரும், அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ஜுனைத்தீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. இன் செயலாளர், உப தலைவர்கள், பொருளாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மாணவர்களுக்குஅல்குர்ஆன் பிரதிகளை வழங்கி வைத்தனர்.

# அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவரின் முக்கிய அறிவித்தல்



(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் நிலவும் கொரோனா தொற்றின் நிலைமையைக் கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் பிரகாரம், நாம் காலாகாலம் கடைப்பிடிக்கும் கஞ்சி வழங்கும் செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்த நேரிட்டுள்ளது என அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள்சம்மேளனதலைவர் எஸ்.எம் சபீஸ் தெரிவித்துள்ளார்.

நோன்புகாலத்தில்,பள்ளிவாசல்களில் பின்பற்றப்பட வேண்டிய பல விதிமுறைகளும் அந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதைப் பின்பற்ற வேண்டிய கடமைப்பாடுகள் எமக்கும் உள்ளன. நாட்டின்சட்டதிட்டங்களைநாம்,பூரணமாக கடைப்பிடிப்பவர்கள். அதிலும் பள்ளிவாசல்களில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை எமது நம்பிக்கையாளர்கள் பேணிவருவதையும் நாம் அறிவோம்.

எனவே, கடந்த காலங்களில் ஒன்றாக இணைந்து நாம் செயற்பட்டது போன்று, இம்முறையும் ஒழுங்குமுறையாக சட்டதிட்டங்களை மதித்து, எமது மார்க்க கடமைகளில் ஈடுபடுவதென அனைத்துபள்ளிவாசல்கள் சம்மேளனம் தீர்மானித்துள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். இந்நிலைமை சீராகி இயல்பு வாழ்வு திரும்பிட இறைவனைப் பிராத்திப்போம். என்று தெரிவித்துள்ளார்.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருதில் எவரிடமும் வாகன தரிப்புக் கட்டணம் செலுத்தாதீர்!

## கல்முனை மாநகர சபை அறிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவு எல்லையினுள் வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள மாநகர சபை, எவரிடமும் அவ்வாறு கட்டணம் செலுத்த வேண்டாம் எனவும் கேட்டுள்ளது.

இது தொடர்பாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவித்துள்ளதாவது

சாய்ந்தமருது பிரதேசத்தில் சில நபர்கள் வாகனத் தரிப்புக் கட்டணம் அறவிடுவதாக மாநகர சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆனால் இவ்வாறு வாகனத் தரிப்புக் கட்டணம் அறவிடுவதற்கு மாநகர சபையனால் பள்ளிவாசலுக்கோ வேறு எவருக்குமோ அனுமதி வழங்கப்படவில்லை.

ஆகையினால், சாய்ந்தமருது பிரதேசத்தில் பிரதான வீதியாயினும், உள்ளூர் வீதிகளாயினும் மாநகர சபை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை எவரிடமும் வாகனத் தரிப்புக் கட்டணம் செலுத்த வேண்டாம் என வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எவராவது வாகனத் தரிப்புக் கட்டணம் கோரினால் உடனடியாக மாநகர சபைக்கு அறிவிக்கவும்.



மேலும், இதன் பின்னர் எவராவது வாகனத் தரிப்புக் கட்டணம் அறவிட்டால் இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிலவ புத்தாண்டை கொண்டாடிய மலையக மக்கள்



(க.கிஷாந்தன்)

பிறந்திருக்கும் பிலவ புத்தாண்டை மலையக மக்கள் சமய வழிபாடுகளுக்கு முதலிடத்தை கொடுத்து நேற்று கொண்டாடினார்கள்.

புத்தாண்டை முன்னிட்டு அட்டன் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் குருக்கள் பாலசுப்பிரமணிய சர்மாக குருக்கள் தலைமையிலும், அட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலும், கொட்டகலை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலும், விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

அத்தோடு அட்டன் நீக்ரோதாரம விகாரையிலும் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

நேற்று பிறந்த தமிழ், சிங்கள புத்தாண்டை மலையக பகுதிகளில் உள்ள மக்கள் கோவில்களுக்கு சென்று புதுவருடத்தை ஆரம்பித்தனர்.

இதில் அதிகளவிலான பக்தர்கள் சுகாதார நடைமுறைகளை பின்றபற்றி கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# அம்பாரை மாவட்டத்திலும் சித்திரை புத்தாண்டு கொண்டாட்டங்கள்



(வி.சுகிர்தகுமார்)

அம்பாரை மாவட்டத்திலும் சித்திரைப்புத்தாண்டு கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வருவதுடன் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி புத்தாண்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

அதிகமான தமிழ் மக்கள் நேற்று வேளையில் மருத்துநீர் வைக்கும் பாரம்பரிய நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

பின்னர் நீராடி புத்தாடை அணிந்து ஆலயங்களுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு இறைவழிபாட்டில் கலந்து கொண்டனர்.

இறைவழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டதுடன் பெரியோர்களின் ஆசியினையும் பெற்றுக்கொண்டனர்.

ஆலய தலைவர் க.கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக்குருக்கள் நடாத்தி வைத்தார்.

இதேநேரம் பலர் தமது வழிபாடுகளை வீடுகளில் இருந்தாவாறே பொங்கல் பூஜை வழிபாடுகளையும் மேற்கொண்டனர்.

இந்நிலையில் ஆலயங்கள் தோறும் அமைதியான முறையில் பூஜை வழிபாடுகள் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தாமதமடைய வாய்ப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் வருடாந்த இடமாற்றம் பெறத் தகுதியானவர்களுள் 05ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்காக கற்பிக்கும் ஆசிரியர்களினதும் ஜீ.சி.ஈ.சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களினதும் இடமாற்றங்களை அப்பரீட்சைகள் முடிவடையும் இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்வி திணைக்களத்திற்கு இது குறித்து அறிவித்துள்ளதாகவும் ஏனைய ஆசிரியர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித தடைகளும் இல்லையென அவர் தெரிவித்துள்ளதாகவும் மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைவாக தற்போது கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து மேற்படி மூன்று வகை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்பான விபரங்களை அவசரமாக கோரியுள்ளது.

எவ்வாறாயினும் இம்மாதம் 19ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவிருந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் இதன் காரணமாக முழுமையாக பிற்போடப்படக் கூடிய வாய்ப்பிருப்பதாக இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர்.ஏ.எல்.முகம்மத் முக்தார் தெரிவித்தார்.

கொரோனா பிரச்சினை காரணமாக தாமதமடைந்த வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தை இன்னும் பிற்போடுவதால் மிக நீண்ட காலமாக மாவட்டத்திற்கு வெளியே கடமையாற்றும் பல ஆசிரியர்கள், குறிப்பாக பெண் ஆசிரியைகள் பாதிக்கப்படுவர் என்பதனால் பதிலாள்களை வழங்கி எப்படியாயினும் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுனர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரை தாம் கோரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# தனியார் வங்கி ஒன்றினால் பராமரிக்கப்பட்ட கடை ஒன்றின் முன்பாக சடலம் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

தனியார் வங்கி ஒன்றினால் பராமரிக்கப்பட்ட கடை ஒன்றின் முன்பாக சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் பிரதான வீதிற்கு அருகில் உள்ள கடைத்தொகுதி ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (13) இரவு இனந்தெரியாத ஒருவரின் சடலம் கிடப்பதாக பொதுமக்களின் தகவலின் பிரகாரம் கல்முனை பொலிஸாரினால் குறித்த சடலம் மீட்கப்பட்டிருந்தது.



சுமார் 65 முதல் 70 வரையிலான வயது மதிக்கத்தக்க இச்சடலம் கொலைசெய்யப்பட்டதா அல்லது இயற்கை மரணமா என பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த தனியார் கடைதொகுதியானது தனியார் வங்கியின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதுடன் மரணமடைந்தவர் காவலாளியாக நியமிக்கப்பட்டவர் எனவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய குறித்த சடலம் தொடர்பில் ஆராய்ந்து உண்மை நிலையை கண்டறிய குறித்த வங்கி நிருவாகத்தின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org